24th January 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ரூ. 15,61,401·98.

(இ) ரூ. 48,097·83.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 15 லட்சம் ரூபாய் அளவில் வருமானம் வந்திருக்கும்போது, ரூ. 48 ஆயிரம் அளவில்தான் கொடுத்திருக்கிறோம். எவ்வளவு மனுக்கள் வந்தன ? அவற்றில் எவ்வளவு கொடுக்கப்பட்டன ? எவ்வளவுக்கு கொடுக்கப்படாமல் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மொத்தம் ரூ. 15,61,401·97 இதில் சேர்ந்திருக்கிறது. 1967–68-ல் 640 மனுக்கள் வந்தன. அதில் ஆராயப்பட்டு தகுதியுடையனவாக வந்திருப்பது 436. அவற்றில் 269 பேருக்கு அளிக்கப்படுகிறது. மற்றவை பரிசீலிக்கப்பட வேண்டும். இதுவரையில் மொத்தம் 1967–68, 1968–69-ல 1969 செப்டம்பர் முடிய இந்த ஆண்டு வரையில் ரூ. 1,30,017·64 அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றவை விரைவில் குழுவினால் ஆராயப்பட்டு விரைவில் அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

Rajah's High School, Sivaganga.

*53 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that there is faction among the students of Rajah's High School, Sivaganga as a result of faction among the teachers themselves and as a result of this, disputes have arisen ; and

(*b*) if so, the action taken thereon ?

சிவகங்கை அரசர் உயர்நிலைப்பள்ளி.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குள் தகராறு உள்ள காரணத்தால் பள்ளி மாணவர்கள் இரு பிரிவாகப் பிரிந்து தகராறுகள் ஏற்படுவதை இந்த அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குள் தகராறு எதும் கிடையாது. மாணவர்களுக்குள்ளும் இரு பிரிவுகள் ஏற்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Tamil Nadu Raffle Scheme.

*54 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the prize amounts under Tamil Nadu Raffle Scheme were taken by the Government because they were not claimed by the prize winners ; and

(*b*) the total amount of these prizes ?

தமிழக அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழக அரசுப் பரிசுச் சீட்டு திட்டத்தில் சில பரிசுகளுக்கு பரிசுத் தொகைகளை கோரிப் பெறாத காரணத்தால் அத்தொகைகள் அரசுக்குச் சேர்ந்துவிட்டன என்பது உண்மையா ?

(இ) அவற்றிற்குரிய பரிசுத் தொகைகள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) 1968-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் 1969-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரை உரிமை கேட்டுப் பெறப்படாத பரிசுத் தொகையின் மதிப்பு ரூ. 12,53,400 ஆகும்.

திரு. எம். ராஜா அய்யர் : பரிசு பெறப்படவில்லை என்ற காரணத்திற்காக, அரசாங்கமே அதை எடுத்துக் கொள்ளும் போது, அந்த நம்பருக்கு அடுத்ததாக இருபக்கமும் உள்ள நம்பர்களுக்கும் அதை அளிக்கலாமா? ஒரு நம்பர் விட்டுவிட்ட காரணத்தால் அடுத்த lucky நம்பருக்கு அதைக் கொடுக்க அரசு முன்வருமா? அதுவும் ஒரு அதிர்ஷ்டம்தானே?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இருந்தாலும், அந்த அதிர்ஷ்டம் எல்லோருக்கும் ஏற்படட்டும் என்ற முறையில் தான் இப்போதிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்வதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. மேலும் இமே இருப்பதைக் காட்டிலும் அப்படி விழுந்த அந்தப் பரிசையே மூன்று மாதம் வரையிலும் வைத்திருக்கிறோம், விழுந்தவர்கள் தேடிப் பார்க்க வேண்டுமென்று. முதல் பரிசு பெற்றவர்களில் பரிசுத் தொகையான ஒரு லட்சம் ரூபாய் ஒன்பது மாதங்களில் ஒரே ஒரு டிக்கட்டுக்குத்தான் வாங்கப்படவில்லை. பத்தாயிரம் ரூபாய் பரிசுகளில் 16 டிக்கட்டுகள், ஆயிரம் ரூபாய் பரிசுகளில் 408, 100 ரூபாய் பரிசுகளில் 5,854 என்று ஒவ்வொரு வரிசையில் தான் அதிகமாக இருக்கிறது. மொத்தம் 12 லட்சம் டிக்கட்டுகள். நாளை காலையிலே அவர்கள் சொன்ன பொங்கல் பரிசுச் சீட்டுகள் 9 மணிக்குக் குலுக்கப்படுகின்றன. அவரவர்கள் தங்கள் அதிர்ஷ்டத்தை அங்கே பார்த்துக் கொள்ளலாம்.

திரு. வி. கே. ராமசாமி முதலியார் : பரிசு வாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு டிக்கட் வாங்குகிறார்கள். அப்படியிருந்தும் இவ்வளவு பெரிய தொகை சர்க்காருக்குப் போக வேண்டிய காரணம் என்ன? இதைப் பற்றி சர்க்கார் தீர விசாரித்து டிக்கட் வாங்குகிறவர்களுக்குச் சலுகை கொடுக்கும்படியாகவும் எல்லோருக்கும் பரிசுகள் கிடைக்கும் படியாகவும் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒன்றும் அதிகமான தொகை அல்ல. இரண்டு கோடியே 72 லட்சம் ரூபாயில் 12 லட்சம் அதிகத் தொகை அல்ல. இதில் சர்க்கார் குற்றவாளிகள் அல்ல. அதிர்ஷ்டம் அவர்கள் பக்கத்தில் இருந்தும் அதை அவர்கள் தவறவிட்டுவிட்டார்கள் என்பதுதான் பொருள்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTI : Will the Government divert some of these funds to the aid of charitable institutions to which the Government are already giving aid?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சாரிட்டபிள் காரியங்கள் என்னும் போது அரசாங்கம் செய்வது எல்லாம் சாரிட்டபிள்தான். அந்தப் பணத்தை அரசாங்கம்தான் செலவழிக்கிறது.

THIRU D. SANTOSHAM : There is a feeling that these prizes are not claimed because probably those numbers related to unsold tickets. That is quite possible. If so, is there any system now being followed so that unsold tickets are not included in the draw? I do not know whether they are even now excluded.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விற்கப்படாத டிக்கட்டுகள் குலுக்கலில் இடம் பெறுவதில்லை.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, லாட்டரி சீட்டுகள் அதிகமாக வாங்கி வாங்கி அதில் அதிர்ஷ்டம் அளிக்காத காரணத்தால், பல குடும்பங்கள் கெட்டுப் போயிருக்கின்றனவே, அவர்களுக்கு அந்த அந்தத் தொகையைப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் ஒரு சீட்டு வைத்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதனால் பாதிக்கப்படுவ தில்லை. லாட்டரி சீட்டு வாங்குவதால் பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. குதிரைப் பந்தயத்தால் ஒரு சிலர் பாதிக்கப்பட்டதாகச் சில தகவல்கள் உண்டு.

திரு. எம். அய்யாசாமி : இந்தமாதிரி பரிசுத் தொகையை வாங் காதவர்கள் எப்போது அவற்றைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்து கேட்டாலும், அந்தத் தொகை கொடுக்கப்படுமா ? அதற்குக் கால வரை யறை உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மூன்று மாத கால வரையறை உண்டு.

Appointment of Village Munsiff and Karnams.

***55 Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Finance be pleased to state the rules, if any, relating to the appointment of Village Munsiff and Karnams ?**

கிராம முன்சிப் கர்ணம் ஆகியோரை நியமிப்பதற்கான விதிகள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

கிராம முன்சிப், கர்ணம் ஆகியோரை நியமிப்பதற்கான விதிகள் ஏதேனுமிருப்பின் அவை யாவை ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : At present the appointments of Village Munsiff and Karnam are governed by the Board's Standing Orders. Consequent on the repeal of the Hereditary Acts, the Government have proposed to formulate a new service scheme for the village officers.

திரு. ஜி. சுவாமிநாதன் : கிராம கர்ணம், முன்சீப், போன்றவர்களைத் தற்காலிகமாக நியமிக்கும் போது, கோட்டாட்சித் தலைவர்கள் ஓரளவுக்கு மனம் போன போக்கில் நியமிப்பதாகத் தெரிகிறது. எனக்குத் தெரிந்த வரையில், ஒரு சில இடங்களில் தகுதி உள்ளவர்கள் வந்திருக்கும்போது, தகுதி இல்லாதவர்களுக்குத் தற்காலிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். இது பற்றி டி. ஆர். ஓ.வுக்குத் தெரிவித்தபோது, அதன் மேல் அதிகாரம் தனக்கு இல்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார். அதைப் பார்க்கும் போது, தற்காலிக நியமனங்களுக்கு மேல் அதிகாரம் டி. ஆர். ஓ.வுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தச் சட்டத்தில் எல்லாம் ரத்தாகிவிட்டது. புதிய முறைப்படி கிராம உத்தியோகஸ்தர்கள் நியமனம் பற்றிய விதிமுறைகள் தயாராகின்றன. அவை பரிசீலனையில் இருக் கின்றன. அதற்கிடையில் பழைய ஸ்டாண்டிங் ஆர்டர் படி நியமனம் செய்கிறோம். புதிய விதி முறையின் படி, இனிமேல் கிராம உத்தியோ கஸ்தர் நியமிக்கப்படுவார். அப்போது இதைக் குறிப்பில் எடுத்துக்கொண் டால், தக்க நடவடிக்கை எடுக்கலாம்.